# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி எண்.18/2017 நாள்.-02-05-2017

பெறுநர்
அனைத்து ஊடகங்கள்
சென்னை

அன்புடையீர், வணக்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் **மு.சுப்பிரமணியன்** மற்றும் பொதுச் செயலாளர் **மு.அன்பரசு** ஆகியோர் வெளியிடும் ஊடகச் செய்தி :-

ஊடகச் செய்தி

**தீவிரமடையும் மருத்துவர் போராட்டம்**
**அரசு உடனே அழைத்துப்பேசி தீர்வு காண வேண்டும்!**

**(மருத்துவர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 5.5.2017ம் தேதி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் உள்ள மருத்துவக்கல்லூரிகள் முன்பு ஆர்ப்பாட்டம் செய்ய முடிவு )**

2000 வருடத்திய மருத்துவ கல்வி ஒழுங்குமுறை விதி 9(4)ன் படி எம்.பி.பி.எஸ். படித்த மாணவர்கள் கிராமப்புறங்களில், குக்கிராமங்களில் மற்றும் மலைவாழ் பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பணிபுரிந்தால் அவர்கள் மருத்துவ பட்ட மேற்படிப்புக்கான நுழைவுத்தேர்வில் பெறும் மதிப்பெண்களோடு ஆண்டுக்கு 10 சதவீத மதிப்பெண்கள் வீதம் அதிகபட்சமான மூன்றாண்டுகளுக்கு 30 சதவீத மதிப்பெண்களை நுழைவுத்தேர்வு மதிப்பெண்களோடு கூட்டி அந்த மதிப்பெண்கள் அடிப்படையில் அவர்களுக்கு மருத்துவ பட்டமேற்படிப்பில் இடஒதுக்கீடு செய்யப்படுவதும், தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் தமிழக அரசுக்கு ஒதுக்கப்படும் இடங்களில் 50 சதவீத இடங்களை இத்தகைய மாணவர்களுக்கு 2000 ஆண்டு முதல் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவதும் நடைமுறையில் உள்ளது. இந்நிலையில் இந்த ஆண்டு மருத்துவ மேற்படிப்பு படிக்க மூன்றாண்டுகள் கிராமப்புறங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பணியாற்றிய மருத்துவ மாணவர்கள் விண்ணபித்த போது அவர்கள் கிராமப்புறங்களில் மூன்றாண்டுகள் பணி செய்ததற்காக வழங்கப்பட்டு வந்த ஊக்க மதிப்பெண்கள் கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளது. இதை எதிர்த்து ராஜேஷ் வில்சன் என்ற மாணவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தபோது அரசுத்தரப்பில் இந்த ஆண்டு மருத்துவமேற்படிப்பு சேர்க்கைக்கான விளக்கக்குறிப்பில் அதுபோன்ற கிராமப்புறங்களில் மலைவாழ்பகுதிகளில் பணியாற்றிய

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

மாணவர்களுக்கு அதிகபட்சமாக 10 மதிப்பெண்கள் மட்டுமே வழங்கப்படும் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், 30 சதவீத மதிப்பெண்கள் வழங்கினால் மருத்துவ மேற்படிப்பு நுழைவுத்தேர்வில் அதிகமதிப்பெண் பெற்று தகுதிக்கான வாய்ப்புகள் உள்ள திறமையான மாணவர்கள் மருத்துவர்களாக முடியாமல் போகும் என்றும், அகில இந்திய மருத்துவ கவுன்சில் வகுத்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படிதான் மருத்துவ மேற்படிப்புக்கான நுழைவுத்தேர்வு மதிப்பெண்களை நிர்ணயிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றம் கிராமப்புறங்களில் மருத்துவ சேவைகளுக்கு இதுபோன்ற ஊக்க மதிப்பெண்கள் அவசியம் என்றும் அதனால் இந்திய மெடிக்கல் கவுன்சில் வகுத்துள்ள விதிமுறைகளும், மருத்துவபட்ட மேற்படிப்பு சேர்க்கைக்கான விண்ணப்ப விளக்கக் குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ள அதிகபட்சம் 10 மதிப்பெண்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல என்றும் 2000 வருடத்திய மருத்துவ கல்வி ஒழுங்குமுறை விதி 9(4)ன் படி மருத்துவ மேற்படிப்பு நுழைவுத்தேர்வு எழுதும் கிராமப்புறங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பணிபுரிந்த மருத்துவர்களுக்கு அவர்கள் பணிபுரிந்த காலத்திற்கேற்ப (அதிகபட்சம் 30 சதவீதம்) ஊக்க மதிப்பெண்கள் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்துள்ள நிலையில் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் இளம் மருத்துவ மாணவர்கள் இதை எதிர்த்து 19.4.2017ஆம் தேதி முதல் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மருத்துவப் பணி என்பது உயிர்காக்கும் அத்தியாவசியப் பணி என்பதும், மருத்துவ மேற்படிப்புக்காக கிராமப்புறங்களில் பணியாற்றும் மருத்துவர்கள் மூலம் கிராமப்புற மக்கள் பெரிதும் பயன்பெற்று வருகின்றனர் என்பதும் கிராமப்புறங்களில் மருத்துவ சேவை செய்ய ஊக்கமளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள விதிமுறைகளை நீக்குவதாலோ மதிப்பெண்களை குறைப்பதாலோ அதனால் பாதிக்கப்படப்போவது ஏழை எளிய மக்கள்தான் என்பதும் கிராமப்புறங்களில் அரசு மருத்துவமனைகளை நம்பியே பெரும்பாலான கிராம மக்கள் நோய்களுக்கான நிவாரணங்களை பெற்று வருகிறார்கள் என்பதும் எல்லோரும் அறிந்த ஒன்றே. இந்நிலையில் தமிழக அரசு போராடும் மருத்துவர்களை அழைத்துப் பேசி சுமூக தீர்வு காணாமல் அசைவற்றிருப்பதால் நோயளிகளும் ஏழை எளிய மக்களும் கடுமையான சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். அரசின் இந்த அலட்சியப் போக்கை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

மருத்துவ பட்டமேற்படிப்பில் அரசு மருத்துவர்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு கிடைக்க அவசர சட்டம் இயற்ற வேண்டும், நீட் தேர்விலிருந்த தமிழகத்திற்கு விலக்கு அளிக்கும் தமிழக அரசின் சட்டத்துக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி போராடி வரும் மருத்துவர்களை அரசு அலட்சியப்படுத்தி வருவதால், அரசு மருத்துவர்களும் பட்டமேற்படிப்பு மருத்துவர்களும் தங்கள் போராட்டங்களை தீவிரப்படுத்தி வருவதை அரசு உணர்ந்து கொண்டு உடனடியாக அவர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி சுமூக தீர்வு காண வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறது. தமிழக அரசு மற்ற போராட்டங்களை போல் இப்போராட்டத்தையும் வாய்மூடி மௌனம் காத்தால் அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகள் பிரிவை புறக்கணித்து போராட்டம், அரசு மருத்துவர்கள் அனைவரும் தற்செயல்விடுப்பு எடுத்து போராட்டம் என இது தீவிரமடையும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேற்படி அரசு மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பட்ட மேற்படிப்பு மருத்துவர்கள் நடத்தும் இந்த போராட்டங்களுக்கு ஆதரவாகவும் நியாயமான அவர்களுடைய கோரிக்கைகள் வெல்லவும் அவர்தம் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் அரசு ஊழியர்கள் 5.5.2017ம் தேதி அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள் முன்பாக கண்டன தெரிவித்தும் ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், அனைத்து ஊடகங்களுக்கும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறது.

**(மு.அன்பரசு)**
பொதுச் செயலாளர்